## வணிகவரித்துறை

3 MAR 2021

அனுப்புநர்
திரு ஆ. சுவாமிநாதன், பி.காம்., பி.எல்.,
இணை ஆணையர் (மாவ),
சென்னை (தெற்கு) கோட்டம்,
சென்னை -35.

பெறுநர்
இணை ஆணையர் (மாவ),
அதிக வரி செலுத்துவோர் பிரிவு,
சென்னை -35.

**ந.க. 4596/ 2017 / அ6-1, நாள்.01.03.2021**

அம்மையீர்,

பொருள் பொதுப்பணிகள் - வணிக வரித் துறை - சென்னை (தெற்கு) கோட்டம் - மறைந்த அரசு ஊழியர் திருமதி ச.காந்திமதி என்பவரின் மகன் திரு R.S. இராகவேந்திரா - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டது - அரசாணை மற்றும் அசல் சான்றுகள் அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை
1) இணை ஆணையர் (மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் ந.க.4596/2017/அ6, நாள்.30.05.2019.
2) அரசாணை (டி)எண்.13, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள். 27.01.2021.
3) அரசு கடித எண்.7708/அ2/2020-2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள். 27.01.2021.
4) கூடுதல் ஆணையர்(நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5, கடித எண்.ஓய்3/568678/2020-1, நாள்.17.02.2021.

---------

பார்வையில் காணும் கடிதங்கள் மற்றும் அரசாணை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு R.S. இராகவேந்திரா, இளநிலை உதவியாளர் என்வரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 20.06.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், பணிவரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) பார்வை 2-ல் காணும் அரசாணை, தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. தனியருக்கு சார்வு செய்து, சார்வு நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) மேலும், தனியரின் கீழ்க்கண்ட அசல் சான்றுகள் தனியரிடம் திருப்பி அளிக்கும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | |
|---|---|
| 1. | தனியரின் கல்வித் தகுதிச் சான்றிதழ் (பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்) |
| 2. | தனியரின் மாற்றுச் சான்றிதழ் |
| 3. | தனியரின் சாதிச் சான்றிதழ் |

மேற்காணும் அசல் சான்றுகள் பெற்றமைக்கான ஒப்புதலையும் அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு :
மேற்கூறியவாறு

ஒம்./- ஆ. சுவாமிநாதன்
இணை ஆணையர் (மாவ),
சென்னை (தெற்கு) கோட்டம்.

// உண்மை நகல் //

2/3/2021
மேலாளர்

02/02/2021

மேலொப்பம்/கடித எண்.4596/2017/அ6-3

இணை ஆணையர் (மாவ) அலுவலகம்
சென்னை (தெற்கு) கோட்டம்
சென்னை 600 035.

நாள். 01.03.2021

அரசாணை (டி)எண்.13, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள். 27.01.2021இத்துடன் இணைத்தனுப்படுகிறது.

ஒம்./- ஆ. சுவாமிநாதன்
இணை ஆணையர் (மாவ)
சென்னை (தெற்கு) கோட்டம்

பெறுநர்

திரு R.S. இராகவேந்திரா, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் (மாவ) அலுவலகம்,
அதிக வரி செலுத்துவோர் பிரிவு,
சென்னை -35.

**(இரட்டிப்பில் - இணை ஆணையர் (மாவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவு மூலமாக)**

(தனியருக்கு சார்வு செய்து, சார்வு செய்த நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).

நகல்

1. இணை ஆணையர் (மாவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவு,சென்னை -35.
2. சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர்.
   **(இணை ஆணையர் (மாவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவு மூலமாக)**

// உண்மை நகல் //

2/3/21

மேலாளர்

02/03/2021

நிதியர் ...

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – சென்னை (தெற்கு) கோட்டம் – திரு இர.ச. ராகவேந்திரா, இளநிலை உதவியாளர் என்பவர் கருணையடிப்படையில் 20.06.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (டி) எண். 13

நாள்:27.01.2021
சார்வரி , தை–14,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (தெற்கு) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4596/2017/ அ6, நாள் 30.05.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. கூடுதல் ஆணையரின் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண். ஒய்3/568678/ 2020, நாள் 16.09.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையின் சென்னை (தெற்கு) கோட்டம், மேல்முறையீட்டுத் துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகத்தில் துணை வணிகவரி அலுவலர் / மேலாளராகப் பணிபுரிந்தபோது திருமதி ச. காந்திமதி என்பவர் 08.04.2017 அன்று மரணமடைந்ததால் அவரது மகன் திரு. இர.ச. ராகவேந்திரா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 07.07.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு இர.ச. ராகவேந்திரா, இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி), அதிகவரி செலுத்துவோர் பிரிவு அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 20.06.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு இர.ச. ராகவேந்திரா என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 20.06.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் அவர்கள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு.இர.ச. ராகவேந்திரா, கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள்

சரிபார்க்கப்பட்டதில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் ம... வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு... அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே வணிகவரித் துறையில், சென்னை (தெற்கு) கோட்டம், மேல்முறையீட்டுத் துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகத்தில் துணை வணிகவரி அலுவலர் / மேலாளராகப் பணிபுரிந்தபோது 08.04.2017அன்று பணியிடை மரணமடைந்த திருமதி ச. காந்திமதி என்பவரது மகன் திரு. இர.ச. ராகவேந்திரா என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி), அதிகவரி செலுத்துவோர் பிரிவு அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 20.06.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.490/ட்டி−1/2021, நாள் 12.01.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.1454/ஜி1/2021−1, நாள் 20.01.2021 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
திரு இர.ச. ராகவேந்திரா, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் (வணிகவரி), அதிகவரி செலுத்துவோர் பிரிவு அலுவலகம்,
சென்னை (தெற்கு) கோட்டம்
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை−5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை−5.
மாநிலக் கணக்காயர், சென்னை−18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை−5 வழியாக)

நகல்:
இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (தெற்கு) கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை−5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை − 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி−1) துறை, சென்னை − 9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை −9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை,
சென்னை−9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/2/21

பிரிவு அலுவலர்

5/2/2021